2003 ஜனவரி 24] [பேரவைத் தலைவர்]

திரு. வெ. சின்னையா அவர்கள் 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை திருமயம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செம்மையாகப் பணியாற்றியுள்ளார்.

திரு. எஸ். முருகையன் அவர்கள் 1962 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரை துரிஞ்சாபுரம் தொகுதியிலிருந்தும் 1967 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரை மற்றும் 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரை கலசப்பாக்கம் தொகுதியிலிருந்தும் தொடர்ந்து மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்.

திரு. எஸ்.ஏ. தங்கராஜன் அவர்கள் 1989 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரை திண்டுக்கல் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு போற்றத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்.

இம்முன்னாள் உறுப்பினர்கள் மறைவினால் அவர்களை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த பெரியவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

முற்பகல் 10—05

2. இரங்கல் தீர்மானம்

உறுப்பினர் திரு. எஸ்.எஸ். மணி நாடார் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கல் தீர்மானம். சாத்தான்குளம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய திரு. எஸ்.எஸ். மணி நாடார் அவர்களுடைய மறைவு குறித்து.

"1996 ஆம் ஆண்டு சாத்தான்குளம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 2001 ஆம் ஆண்டு வரை பணியாற்றியவரும், 2001 ஆம் ஆண்டில் அதே தொகுதியிலிருந்து இரண்டாம் முறையாக இப்பேரவைக்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டவரும், அனைத்து தரப்பு மக்களின் ஏகோபித்த ஆதரவையும், அன்பையும் பெற்றவரும், நலிந்த மக்களின் மேம்பாட்டிற்காகப் பாடுபட்டவரும், சமூக சேவையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவரும், அனைவரிடத்தும் நட்புணர்வோடு திகழ்ந்தவரும், எளிமையும், இனிய பண்பும், அடக்கமும், செயல் திறனும் கொண்டு சீரிய முறையில் பணியாற்றியவருமான திரு. எஸ்.எஸ். மணி நாடார் அவர்கள் 9—1—2002 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. அவரது மறைவால் அவரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினர்க்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது."

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்துவிட்ட மாமன்ற உறுப்பினருக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன் மூலம் தீர்மானம் நிறைவேறியது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மறைந்த இம்மாமன்ற உறுப்பினருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில், பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன.

பேரவை மீண்டும் 28—01—2003, செவ்வாய்க்கிழமை அன்று காலை 10—00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை முற்பகல் 10—08 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

———

3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

— ஏதுமில்லை —